<u>சுருக்கம்</u>

ஆசிரியர் பயிற்சி நிறுவனம் - மாணவர் சேர்க்கையில் சிறப்பு இட ஒதுக்கீடு - சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு இட ஒதுக்கீடு செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி(யு1)துறை

அரசாணை 1டி எண்.236

நாள். 20.11.2002

படிக்கப்பட்டவை

1. அரசாணை 1டி எண்.89 பள்ளிக்கல்வி நாள்.17.6.2002
2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித ந.க.எண்.6370/சி2/2002 நாள்.12.7.2002

<u>ஆணை</u>

அரசாணை 1டி எண்.89, பள்ளிக்கல்வித்துறை நாள்.17.6.2002-ல் பத்தி 3-க்கு சிறுதிருத்தமாக, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சிறப்பு ஒதுக்கீடு இடங்களானது அந்தந்த இனங்களுக்கு 2002-2003 முதல் கீழ்க்கண்டவாறு அமையுமென தெரிவிக்கப்படுகிறது:-

| | |
|---|---|
| 1. மறு மணமாகாத விதவைகள் (வட்டாட்சியர் சான்றிதழின் பேரில்) | 74 இடங்கள் (ஒவ்வொரு நிறுவனத்துக்கும் 2 வீதம் |
| 2. உடல் ஊனமுற்றோர்கள் (மாவட்ட மருத்துவக்குழு சான்றிதழின் பேரில்) | 44 இடங்கள்(ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 1 வீதம்) |
| 3. முன்னாள் படை வீரர்களின் குழந்தைகள் ((முன்னாள் படைவீரர் நல மாவட்ட அலுவலரின் சான்றிதழின் பேரில்) | 132 இடங்கள் (ஒவ்வொரு நிறுவனத்துக்கும் 3 இடங்கள் வீதம்) |
| 4. சமூக நலத்துறை நடத்தும் சேவை இல்லங்களில் பயின்ற அனாதைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் (மாவட்ட சமூக நல அலுவலரின் சான்றிதழின் பேரில் சமூகநலத்துறை இயக்குநர் அலுவலக இணை இயக்குநருக்கு குறைவாக இல்லாமல் உள்ள அலுவலர் பரிந்துரையின் பேரில்) | 30 இடங்கள் |

5. சுதந்திரப்போராட்ட தியாகிகளின் வாரிசுகள் (மகன்/மகள்/பேரன்/பேத்தி) (மைய அரசு/தமிழக அரசால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் சம்பந்தப்பட்ட ஆட்சியரால் வழங்கப்பட்ட உறவு முறை வாரிசு சான்றிதழின் பேரில் — 28 இடங்கள்

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.வி.சங்கர்.
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6

<u>நகல்</u>
சமூக நலத்துறை, சென்னை-9
சமூக நல இயக்குநர், சென்னை-6
பொதுத்துறை (முன்னாள் படைவீரர்) சென்னை-9
முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை-3

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

இர. ஜெயராமன்
பிரிவு அலுவலர்

4

5